பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

16 07 2026 THURSDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. நடப்பு கல்வியாண்டில், இளநிலை மருத்துவ படிப்புக்கு கூடுதலாக 9 ஆயிரத்து 911 இடங்களுக்கு தேசிய மருத்துவ ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

2. அஞ்சலகங்கள் தற்போது வங்கி மற்றும் பாஸ்போர்ட் சேவைகளை வழங்கி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. பெட்ரோல், டீசல் மற்றும் விமான எரிபொருள் ஏற்றுமதிக்கான சிறப்பு கூடுதல் கலால்வரி கட்டணங்களை மத்திய அரசு மாற்றியமைத்துள்ளது.

4. தமிழக அமைச்சரவைக் கூட்டம், முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

5. ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி.சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

நடப்பு கல்வியாண்டில், இளநிலை மருத்துவ படிப்புக்கு கூடுதலாக 9 ஆயிரத்து 911 இடங்களுக்கு தேசிய மருத்துவ ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்மூலம், இளநிலை மருத்துவ படிப்புக்கான இடங்களின் எண்ணிக்கை ஒரு லடச்த்து 36 ஆயிரத்து 939ஆக அதிகரித்துள்ளதாக சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சுகாதாரத்துறை கட்டமைப்பை வலுப்படுத்த இந்த நடவடிக்கை உதவிடும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் மருத்துவ தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் எல்லை சாலை நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

*கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று அவர் கூறினார்.*

*எல்லைப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு வசதி திட்டங்களை அவர் பட்டியலிட்டார்.*

*தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதில் எல்லை சாலை நிறுவனம் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.*

*கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது என்பது, அரசுக்கான பணி மட்டுமல்ல என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்.*

*தொழில்துறையினரும் இதில் பங்கேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.*

*இந்நிகழ்ச்சியில், இந்த நிறுவனத்தில் சிறப்பாக பணியாற்றிய 7 பேருக்கு விருதுகளையும் திரு. ராஜ்நாத் சிங் வழங்கினார்.*

*>>>>>><<<<<<*

*வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.*

*இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் நிறுவன தினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.*

*கடந்த 98 ஆண்டுகளாக இந்தக் குழுமம், பல்வேறு சாதனைகளை படைத்துள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.*

*வேளாண் ஆராய்ச்சி, புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் நவீன வேளாண் இயந்திரங்களை உருவாக்குவதில் இதன் பங்கு இன்றியமையாதது என்றும் அவர் கூறியுள்ளார்.*

*வேளாண் துறையில் சுயசார்பினை எட்ட வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*அஞ்சலகங்கள் தற்போது வங்கி மற்றும் பாஸ்போர்ட் சேவைகளை வழங்கி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*சென்னை, கொளத்தூரில் அஞ்சலக பாஸ்போர்ட் சேவை மையத்தை இன்று திறந்து வைத்து அவர் பேசினார்.*

*(சவுண்ட் பைட் - எல். முருகன் (1) 51 செகண்ட்ஸ்)*

அரசு திட்டங்களின் பலன்கள் தற்போது மக்களிடம் நேரடியாக கொண்டு சேர்க்கப்படுவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறினார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் (2) 43 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

பெட்ரோல், டீசல் மற்றும் விமான எரிபொருள் ஏற்றுமதிக்கான சிறப்பு கூடுதல் கலால்வரி கட்டணங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதன்படி டீசல் மீதான ஏற்றுமதி வரி லிட்டருக்கு 15 ரூபாய் 50 காசும், விமான எரிபொருள் மீதான ஏற்றுமதி வரி லிட்டருக்கு 14 ரூபாய் 50 காசும் உயர்த்தப்பட்டுள்ளதாக நிதியமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பெட்ரோல் மீதான ஏற்றுமதி வரி லிட்டருக்கு 2 ரூபாய் 50 காசு குறைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மாற்றியமைக்கப்பட்ட கட்டணங்கள் இன்றுமுதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

உலகப் புகழ்பெற்ற பூரி ஜெகந்நாதர் ரத யாத்திரைக்கான ஆயத்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த யாத்திரை இன்று பிற்பகல் தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

9 நாட்கள் நடைபெறவுள்ள இந்த ரத யாத்திரையில் லட்சக்கணக்கானோர் பங்கேற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ரத யாத்திரை செல்லும் வழித்தடத்தில் மழை நீர் தேங்காமல் இருப்பதற்கு விரிவான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ரத யாத்திரையை ஒட்டி, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் பலர் வாழ்த்துச் செய்தி விடுத்துள்ளனர்.

>>>>>><<<<<<

காசநோய் பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்ட மாதிரிகளை ட்ரோன் மூலம் கொண்டு செல்வது, நோயாளிகளின் செலவினங்களை குறைக்கும் என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி குழுமத்தின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

தெலங்கானாவில் எய்ம்ஸ் மருத்துவமனையுடன் இணைந்து இந்த சோதனையை ICMR மேற்கொண்டதாக சுகாதாரத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

800க்கும் மேற்பட்டோர் இந்த ஆய்வில் பங்கேற்றதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, ஊரகப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு இது பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்று அந்த ஆய்வில் தெரியவந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழக அமைச்சரவைக் கூட்டம், முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

தீவிரவாதத்தை ஒடுக்குவதில் BIMSTEC நாடுகள் ஒருங்கிணைந்து பணியாற்றி வருவதாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் BIMSTEC நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் பங்கேற்ற கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

எதிர்கால சவால்களையும் BIMSTEC நாடுகள் ஒருங்கிணைந்து எதிர்கொள்ளும் என்றும் திரு. அஜித் தோவல் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

உணவு பாதுகாப்பில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் துறையின் செயலர் திரு. Avinash Joshi கூறியுள்ளார்.

புதுதில்லியில் உணவுத்துறை தொடர்பான சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

உணவு உற்பத்தியில் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

உணவுப் பொருட்களை பதப்படுத்துவதில் தூய்மையான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றும் திரு. Avinash Joshi கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

IRCTC-யின் புதுப்பிக்கப்பட்ட இணையதள சேவை செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

*இதன்மூலம், பயணச் சீட்டுகளை முன்பதிவு செய்வது எளிதாக்கப்பட்டுள்ளதாக ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*இந்த புதுப்பிக்கப்பட்ட இணையதள சேவை தொடர்பாக பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்றும் கோரப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*உத்தரபிரதேசத்தில் உள்ள 13 இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.*

*தீவிரவாத அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கியது தொடர்பாக பதிவுசெய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>>><<<<<<*

*தென்கொரிய மத்திய வங்கி வட்டி விகிதங்களை உயர்த்தியுள்ளது.*

*கடந்த 3 ஆண்டுகளில் முதல்முறையாக வட்டி விகிதங்கள் உயர்த்தப்பட்டுள்ளதாக அந்த வங்கியின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழல் காரணமாக, பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி.சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 21-14 என்ற செட்கணக்கில் சீனாவின் Han Yue-வை வென்றார்.*

*>>>>>><<<<<<*

*இலங்கைக்கு எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் Lakshya Raichandani அபாரமாக ஆடி, இரட்டைச் சதம் அடித்தார்.*

*Galle-யில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 4வது மற்றும் இறுதி நாளான இன்று 3 விக்கெட் இழப்புக்கு 378 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிவரும் இந்தியா சற்றுமுன்வரை 7 விக்கெட் இழப்புக்கு 484 ரன் எடுத்துள்ளது.*

*Lakshya Raichandani இரட்டைச் சதம் அடித்து 207 ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.*

***>>>>>>END<<<<<<***